**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்றவியல் நடைமுறை விதி 154 இன் கீழ்)~~
(Under Section 173 BNSS)

C 8129824

1. District : ஈரோடு
மாவட்டம்
PS: ல.ஒ.த.பிரிவு
காவல்நிலையம் ஈரோடு
Year: 2024
ஆண்டு
FIR No. 04/AC/2024
மு.த.அ. எண்
Date: 29.07.20[...]
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : —
குற்ற நிகழ்வு நாள்
Date from : 15.07.2024
நாள் முதல்
Date to : 22.07.2024 மற்றும் 27.07.2024
நாள் வரை
Time Period : —
நேர அளவு
Time from : —
நேரம் முதல்
Time to : —
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.07.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 18.00 மணி
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) G.DVAC-III
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 28.07.2024 / 18.00 மணி, 29.07.2024 / 06.30 மணி
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 75 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : —
முறைக் காவல் எண் —
(b) Address : ஊராட்சி மன்ற அலுவலகம், கொத்தமங்கலம்,
முகவரி ஊராட்சி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M.கனகராஜன்
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : மந்திநாதன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 08.03.1990
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில் விவசாயம்
(g) Address : மொக்கைத்தோட்டம், கொக்கரகுண்டி,
முகவரி இக்கரைதத்தப்பள்ளி கிராமம், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திருமதி. மல்லிகா, ஊராட்சிமன்றதலைவர், கொத்தமங்கலம் ஊராட்சி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.
2) திரு. சண்முகம், ஊராட்சி மன்ற துணை தலைவர், கொத்தமங்கலம் ஊராட்சி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது:

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்-
-பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 29/7/2024 [signature] 29.7.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.07.2024 / 06.45 மணி
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.ரேகா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.க.பிரிவு, ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No.4/AC/2024 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 28.07.2024-ம் தேதி மாலை 18.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது M.கனகராஜன், த/பெ மஞ்சுநாதன், மொக்கைத்தோட்டம், கொக்கரகுண்டி,இக்கரைத்தத்தப்பள்ளி கிராமம், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல்: M.கனகராஜன், த/பெ மஞ்சுநாதன், மொக்கைத்தோட்டம், கொக்கரகுண்டி, இக்கரைத்தத்தப்பள்ளி கிராமம், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம். பெறுதல்: ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. அய்யா, எனக்கு சத்திமங்கலத்தில் உள்ள இக்கரைத்தத்தப்பள்ளி கிராமத்தில் ரீ.ச.எண்.6/4, 5 மற்றும் 10/9 ஆகிய காலைகளில் சுமார் 4.36 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நான் விவசாயம் செய்து வருகிறேன். மேலும், எனது நண்பர் ரவிச்சந்திரன் அவர்களுக்கு சத்தியமங்கலத்தில் உள்ள ராஜன் நகரில் சர்வே எண்.661/2B, 661/3B மற்றும் 690/1 ஆகிய காலைகளில் சுமார் 4.80 ½ ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் அவர் விவசாயம் செய்து வருகிறார். எங்களது விவசாய பூமியில விவசாய உபயோகத்திற்கும், கால்நடைகளை பராமரிப்பதற்கும் தண்ணீர் போதியளவில் இல்லை. அதனால், நானும், எனது நண்பர் திரு.ரவிச்சந்திரன் அவர்களும் பவானி ஆற்றுக்கு பக்கத்தில் கொத்தமங்கலம் கிராமம் சர்வே எண்.130/2B-ல் 1 சென்ட் நிலத்தினையும் மற்றும் 130/2Cல்- 1 சென்ட் நிலத்தினையும் தனித்தனியாக கிரயம் செய்து முடித்தோம். பின்னர், எங்களது நிலத்தில் தனித்தனியாக போர் ஓட்டினோம். நான் மேற்படி சர்வே எண்.130/2B காலையில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து அரசு புறம்போக்கு நிலத்தின் வழியாக குழாய் பதித்து இக்கரைத்தத்தப்பள்ளி கிராமத்தில் உள்ள எனது விவசாய நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்ல முடிவு செய்தேன். எனது நண்பர் திரு.ரவிச்சந்திரனும் அவருக்கு சொந்தமான கொத்தமங்கலம் கிராமம் சர்வே எண்.130/2C காலையில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து அரசு புறம்போக்கு நிலத்தின் வழியாக குழாய் பதித்து ராஜன் நகரில் உள்ள அவரது விவசாய நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்ல முடிவு செய்தார். எனவே, இது சம்மந்தமாக கடந்த 24.06.2024-ம் தேதி வருவாய் வட்டாட்சியர், சத்தியமங்கலம் முகவரியிட்டு கொத்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலரிடம் நானும், திரு.ரவிச்சந்திரன் அவர்களும் தனித்தனியாக மனு கொடுத்தோம். பின்னர், 28.06.2024-ம் தேதி கொத்தமங்கலம் கிராம நிர்வாக அலுவலர் எங்களை அழைத்து அரசு புறம்போக்கு நிலத்தில் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்ல பாதைவரி அனுமதி கோரியது சம்மந்தமாக பாரளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஊராட்சிமன்ற தலைவர் ஆகியோரின்

கருத்தினை கேட்டல் தொடர்பான கடிதங்களை எங்களிடம் கொடுத்தார். நாங்கள் அதை பெற்று மேற்படி நபர்களிடம் தனித்தனியாக வழங்கி அக்னாலெட்ஜ் மென்ட்களை எங்களிடம் வழங்கப்பட்ட கடிதங்கள் ஒன்றில் தனித்தனியாக பெற்றோம். பின்னர், கடந்த 15.07.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் எனது நண்பர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள் அவரது செல்போன் எண்.96260 27831-லிருந்து கொத்தமங்கலம் பஞ்சாயத்து தலைவர் திருமதி.மல்லிகா அவர்களின் செல்போன் எண்.93450 09986-ற்கு போன் செய்து பாதைவரி அனுமதி கோரியது சம்மந்தமாக கேட்டபோது, பஞ்சாயத்து ஆபிசுக்கு வரச்சொன்னார். நாங்களும் கொத்தமங்கலம் பஞ்சாயத்து ஆபிசுக்கு சென்று பஞ்சாயத்து தலைவர் திருமதி.மல்லிகா அவர்களை சந்தித்து எங்களது விவசாய பூமிக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் குழாய் பதித்து தண்ணீர் எடுத்து செல்ல பாதைவரி அனுமதி கோரியது சம்மந்தமாக கேட்டோம். அப்போது அவர் எங்களுக்குன்னு எல்லாரும் கொடுப்பதை கொடுங்கள் என்று கேட்டார். அங்கிருந்த பஞ்சாயத்து துணை தலைவர் சண்முகம் அவர்களும் உங்களுக்கு தெரியாததா நாலு பேருகிட்ட விசாரிச்சிருப்பீங்கள்ல இந்த வேலைக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் வரை வாங்குகிறோம். நீங்களும் ஆளுக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் எங்களுக்கு கொடுங்கள் என்று சொன்னார். எங்களால அவ்வளவு தொகையெல்லாம் கொடுக்க முடியாது கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டோம். அதற்கு தலைவர் மற்றும் துணைதலைவர் இரண்டுபேரும் மெம்பர்களிடம் கேட்டுவிட்டு சொல்வதாக சொன்னார்கள். பின்னர், நானும், எனது நண்பர் திரு.ரவிச்சந்திரன் அவர்களும் கடந்த 22.07.2024-ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் கொத்தமங்கலம் பஞ்சாயத்து ஆபிசுக்கு சென்றபோது அங்கு பஞ்சாயத்து தலைவர் இல்லை. அங்கிருந்த பஞ்சாயத்து துணை தலைவர் திரு.சண்முகம் அவர்களிடம் பாதைவரி அனுமதி குறித்து கேட்டபோது, இரண்டு பேரும் சேர்ந்து இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் கொடுத்தால்தான் வேலையாகும் எதுக்கும் மெம்பர்களிடம் கேட்டுவிட்டு சொல்வதாக சொன்னார். அதன்பின்னிட்டு, 27.07.2024-ம் தேதி காலை சுமார் 11.15 மணிக்கு கொத்தமங்கலம் பஞ்சாயத்து ஆபிசுக்கு சென்று தலைவர் மல்லிகா அவர்களையும், துணை தலைவர் சண்முகம் அவர்களையும் பார்த்து நீங்கள் சொன்ன தொகை அதிகமாக இருக்குது என்றும், அதுபோக அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையும் உள்ளது கொஞ்சம் குறைக்க சொல்லி கேட்டோம். அப்போது அவர்கள் எல்லாத்துக்கும் கொடுக்கனும் அதனால தொகையை எல்லாம் குறைக்க முடியாது நாங்கள் ஒரு நபருக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் வாங்குவோம், நீங்கள் இரண்டுபேரும் சேர்ந்து வந்ததால் ஆளுக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் வீதம் மொத்தம் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பணத்தை வருகிற 29-ம் தேதி திங்கள் கிழமை கொண்டு வந்து கொடுங்கள் அப்போது தான் பஞ்சாயத்தில் தீர்மானம் வைத்து அனுமதி தர முடியும் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். தலைவர் மல்லிகா அவர்களும் துணை தலைவர் சண்முகம் சொன்னபடி பணத்தை கொடுத்துவிட்டு வேலையை முடிச்சுட்டு தண்ணி கொண்டுபோவதை பாருங்க என்று கறாராக சொன்னார். நாங்கள் யோசனை செய்து

பார்த்தபோது கொத்தமங்கலம் பஞ்சாயத்து தலைவர் மல்லிகா அவர்களுக்கும், துணை தலைவர் சண்முகம் அவர்களுக்கும் லஞ்சமாக பணம் கொடுக்க கூடாது என்று தோன்றியது. மேலும், ஈரோடு, லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம். இது சம்மந்தமாக எனது பெயரில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம். எங்களுக்கு சொந்தமாக கொத்தமங்கலம் கிராமம் சர்வே எண்.130/2B-ல் 1 சென்ட் நிலம் மற்றும் 130/2Cல்- 1 சென்ட் நிலம் ஆகியவற்றில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து எங்களுக்கு சொந்தமான இக்கரைத்தத்தப்பள்ளி கிராமம் மற்றும் ராஜன் நகரில் உள்ள விவசாய நிலங்களுக்கு அரசு புறம்போக்கு நிலத்தின் வழியாக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்ல தீர்மாணம் நிறைவேற்ற லஞ்சமாக பணம் கேட்கும் கொத்தமங்கலம் பஞ்சாயத்து தலைவர் மல்லிகா மற்றும் துணை தலைவர் சண்முகம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (M.கனகராஜன்) 28/07/2024

Sir, Received the above said computer typed complaint on 28.7.2024 at 18.00 hrs. Sd/- (xxxxxxxx) 28.7.24 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complainant through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.04/AC/2024 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 06.30 hrs today on 29.07.2024. Sd/- (xxxxxxxx) 29.7.24 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of M.Kanagarajan, S/o Manjunathan, Mokkai Thottam, Kokkarakundi, Ikkaraithathapalli Village, Kothamanglam, Sathyamangalam Taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

29.7.24

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.